பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
17 07 2025 **THURSDAY** 12 40 **PM**
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தூய்மை நகரங்களுக்கான **Swachh Survekshan** விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

2. பத்து லட்சம் பேருக்கு இலவசமாக செயற்கை நுண்ணறிவுப் பயிற்சி அளிக்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினின் விளம்பர அரசியலை மக்கள் ஒருபோதும் நம்பப் போவதில்லை என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஆகாஷ் ப்ரைம் ஏவுகணை, லடாக்கில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

5. ஃப்ரீ ஸ்டைல் கிராண்ட்ஸ்லாம் செஸ் போட்டியில் இந்தியாவின் பிரக்னானந்தா மற்றும் அர்ஜுன் எரிகைசி காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>>>><<<<<<<<<

தூய்மை நகரங்களுக்கான **Swachh Survekshan** விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்களுக்கான பிரிவில், இந்தூர், சூரத், நவிமும்பை, விஜயவாடா நகரங்களுக்கு இந்த விருதுகளை அவர் வழங்கினார்.

இதேபோன்று, பெரு நகரங்கள், நடுத்தர நகரங்கள், சிறிய நகரங்கள், மிகச்சிறிய நகரங்கள் என்ற பிரிவுகளில் மொத்தம் 78 விருதுகள் வழங்கப்பட்டன.

கழிவுகளை குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி அடிப்படையில் சுமார் மூவாயிரம் பேர் 45 நாட்கள் மதிப்பீடு செய்து இந்த விருதுக்கான நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

>>>>>>>>><<<<<<<<<

நாட்டில் உள்ள பத்து லட்சம் பேருக்கு இலவசமாக செயற்கை நுண்ணறிவுப் பயிற்சி அளிக்கப்படும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் வகையில் நடைபெற்ற பொதுசேவை மைய தின விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், இந்தப் பயிற்சியில் கிராம அளவிலான தொழில் முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறினார்.

டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் பலன்களை நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில், கிராம அளவிலான தொழில் முனைவோரின் பங்களிப்பிற்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

இதில் பொதுசேவை மைய பணியாளர்களின் சாதனைகளும் மகத்தானது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள 90 சதவீத கிராமங்களில் பொதுசேவை மையங்கள் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில் காய்கறி வியாபாரிகள் முதல் தேநீர் வியாபாரிகள் வரை **UPI** பரிவர்த்தனைகளை மேற்கொள்வதன் மூலம் டிஜிட்டல் பரிவர்த்தனையில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**>>>>>>>>><<<<<<<<<**

தேர்தல் ஆதாயத்திற்காக ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில் தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு வரும் விளம்பர அரசியலை மக்கள் ஒருபோதும் நம்பப் போவதில்லை என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் பிஜேபி – அஇஅதிமுக கூட்டணி அமைந்ததில் இருந்தே, திரு. மு.க.ஸ்டாலின் அச்சத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

திமுக ஆட்சி முடிவடையவுள்ள நிலையில், உங்களுடன் ஸ்டாலின் என்ற பெயரிலும், மற்றொரு விளம்பர அரசியலை முதலமைச்சர் நடத்தி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பிஜேபி எதிர்ப்பு என்ற பெயரில் கூட்டணி கட்சிகளை தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து, கொலைக் குற்றங்கள், பாலியல் அத்துமீறல்கள் மற்றும் போதைப் பொருள் பழக்கம் அதிகரித்துள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<<

முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஆகாஷ் ப்ரைம் ஏவுகணை, லடாக்கில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

லடாக்கின் கிழக்குப் பகுதியில் தரைமட்டத்திலிருந்து 15 ஆயிரம் அடி உயரத்தில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

ராணுவத்தின் வான் பாதுகாப்புப் பிரிவும், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து இரண்டு நாட்கள் இந்த சோதனையில் ஈடுபட்டன.

சோதனை வெற்றிகரமாக அமைந்ததை அடுத்து ‘ஆகாஷ் ப்ரைம்’ சாதனம், ஆகாஷ் வான் பாதுகாப்பு பிரிவின் மூன்றாவது மற்றும் நான்காவது படைப் பிரிவுகளில் சேர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை ஏவுகணை 4 ஆயிரத்து 500 மீட்டர் உயரம் வரையிலும் 25 முதல் 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்குகளையும் துல்லியமாக தாக்கக்கூடியதாகும்.

>>>>>>>>><<<<<<<<<<

மோசமான வானிலை காரணமாக அமர்நாத் யாத்திரை இன்று தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கஷ்மீரின் பஹல்காம் மற்றும் ஜம்முவின் **Baltal** ஆகிய பாதைகளிலும் கனமழை பெய்து வருவதால், யாத்திரை நிறுத்தப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அமர்நாத் யாத்திரை தொடங்கியதிலிருந்து கடந்த 14 நாட்களில் இதுவரை இரண்டரை லட்சத்திற்கும் அதிகமான யாத்ரிகரிகள் அமர்நாத் பனிலிங்கத்தை தரிசனம் செய்துள்ளனார்.

>>>>>>>>><<<<<<<<<<

தென்அமெரிக்க நாடான பொலிவியா-வுக்கு 3 லட்சம் டோஸ் தட்டம்மை மற்றும் **Rubella** தடுப்பு மருந்துகளை இந்தியா அனுப்பியுள்ளது.

வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இதனை தெரிவித்துள்ளார்.

பொலிவியாவில் உள்ள மக்களுக்கு உதவும் வகையில் இந்த மருந்துகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>>>><<<<<<<<<<

பங்களாதேஷின் **Mymensingh** நகரில் உள்ள சத்யஜித்ரே-யின் பூர்வீக இல்லத்தை இடிக்கும் முடிவை இந்தியாவின் வேண்டுகோளை ஏற்று, நிறுத்தி வைப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்திய திரையுலகின் முன்னோடி சத்யஜித்ரே-யின் முன்னோர்கள் வசித்து வந்த இல்லம், வங்கக் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாக திகழ்வதுடன் ஒரு பாரம்பரிய கட்டிடம் என்பதால் அதனை பாதுகாக்க உதவுமாறு வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தியிருந்தது.

>>>>>>>>><<<<<<<<<<

மக்களுக்கு குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்கும் வகையில் மத்திய அரசின் மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழகத்தின், அரியலூரில் இயங்கி வரும் மக்கள் மருந்தகம், தங்களுக்கு மிகுந்த பயனளிப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 57 செகண்ட்ஸ்)

>>>>>>>>><<<<<<<<<<

கேரளா, மாஹே மற்றும் தெற்கு கர்நாடக பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆந்திரா மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும், உத்தரபிரதேசத்தின் பல மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பிரயாக்ராஜ், சோன்பத்ரா, மிர்ஸாபூர், ஜான்சி உள்ளிட்ட மாவட்டங்கள், கனமழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதேபோல ஜார்கண்டில் பெய்த மழையால், பல ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக வீடுகளுக்குள் மழைநீர் புகுந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>>>>>><<<<<<<<<<

பீகாரில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல், வீட்டு உபயோகத்திற்காக 125 யூனிட் மின்சாரம் வரை இலவசமாக வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

இதன்மூலம், அம்மாநிலத்தில் உள்ள ஒரு கோடியே 67 லட்சம் குடும்பங்கள் பயனடைவார்கள் என்று கூறியுள்ள அவர், அடுத்த மூன்றாண்டுகளில் இந்த பயனாளிகளின் வீடுகளிலும், பொது இடங்களிலும் சூரியசக்தி தகடுகள் அமைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் வீடுகளில் சூரியசக்தி மேற்கூரை பொருத்துவதற்கான செலவை, பீகார் அரசே முழுமையாக ஏற்றுக் கொள்ளும் என்றும் திரு. நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<<

**Las Vegas**-ல் நடைபெற்று வரும் ஃப்ரீ ஸ்டைல் கிராண்ட்ஸ்லாம் செஸ் போட்டியில் இந்தியாவின் பிரக்னானந்தா மற்றும் அர்ஜுன் எரிகைசி காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பிரக்னானந்தா காலிறுதிக்கு முந்தைய சுற்றில், நார்வேயின் மேக்னஸ் கார்ல்ஸனை வென்று, 4 புள்ளி ஐந்து புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<<

செக்குடியரசில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – சீனாவின் **Wushuang** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 3-6, 10-7 என்ற செட்கணக்கில் ரொமேனியாவின் **Gabriela – ** மெக்ஸிகோவின் **Ana Sofia** இணையை வென்றது.

>>>>>>>>><<<<<<<<<<

விக்டோரியா ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Shameena** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 11-4, 11-9, 8-11, 11-8 என்ற செட்கணக்கில் பாகிஸ்தானின் **Mehwish Ali**-யை வென்றார்.

**>>>>>>>>><<<<<<<<<**

16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற புள்ளிக்கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.

இதில் வெற்றி பெற்றதன் மூலம், 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான உலக வாலிபால் சாம்பியன் போட்டியில் பங்கேற்க இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

**>>>>>>>>><<<<<<<<<**